கிழவன் பெரியசாமி செத்ததும் சொத்து நியாயப்படி அண்ணார் மகன் என்னைச் சேருகிறது. அதனாலே நான் வந்தேன், நீ நினைச்ச தங்கசாமி டவுனிலே பழ வியாபாரம் பண்ணுகிறான். இந்தத் தங்கசாமிக்கு ஒரே ஒரு பெண் ஜாதிதான். அவள் பேரு பாஞ்சாலி'' என்று சிரித்த தங்கசாமி அவள் முகத்தை ஆசையுடன் பார்த்தான்.

பாஞ்சாலிக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. பதில் பேசாது குனிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்த அவளிடம், ''எப்படி இருந்தால் என்ன? பாஞ்சாலியின் சபதம் நிறைவேறிச்சல்லவா?'' என்று கேட்ட தங்கசாமி சிரித்தான். பாஞ்சாலியின் உள்ளம் பூரித்தது.

# சித்தப்பாவின் சொத்து

புகையிலை வியாபாரி கந்தசாமிப் பிள்ளை காலமாகி இருபது நாட்கள் உருண்டோடு விட்டன. அவரது ஈமக் கிரியைகள் முடியும்வரை 'சுந்தர பவன'த்தில் வந்து குவிந்திருந்த அவரது சுற்றத்தார்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டனர். பிள்ளையவர்களின் சொத்துக்குச் சட்டப்படி வாரிசுகளான அந்த நான்கு பங்காளிகள் மட்டும் தங்கள் குடும்பத்துடன் 'சுந்தர பவன'த்தில் இன்னும் சில நாட்கள் தங்க நேர்ந்தது.

கந்தசாமியின் உயில் பிரகாரம் அவருடைய பங்களா, ரொக்கப் பணம், வீட்டிலுள்ள பொருள்கள் ஆகியவற்றைக் குமரேசன், கோதண்டம், அகல்யா, சுந்தரமூர்த்தி என்ற நான்கு பேர்களும் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டியவர்கள். கந்தசாமிப் பிள்ளையின் குடும்ப வக்கீல் வரதராஜலு நாயுடு, பிள்ளைவாள் காலமான மூன்றாவது நாள் அவருடைய உயிலின் தாத்பரியத்தை எடுத்து வாரிசுதாரர்களுக்கு நன்கு விளக்கினார். பங்களா, அதில் உள்ள

சாமான்கள், நகைகள் முதலியவைகளுக்குப் பொதுவாக மதிப்புப் போட்டு அதை நான்காக வகுத்துப் பிரித்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது கந்தசாமிப் பிள்ளை யின் உயிலில் உள்ள கருத்து. சொத்தைப் பங்கிடுவது எப்படி இருந்தாலும் யார் யாருக்கு என்ன விதமான பொருள்கள் வேண்டும் என்பதை யோசித்துத் தீர்மானித் துச் சில நாட்களில் கூறிவிட்டால் குழப்பமும் சண்டையு மின்றிச் சொத்தைப் பங்கிட்டுவிட முடியும் என வக்கீல் கூறியிருந்தார்.

மறுநாள் பகலுக்குள் தங்களுக்கு வேண்டிய பொருள் களைப் பற்றி ஒவ்வொருவரும் ஒரு ஜாபிதா வக்கீலிடம் சமர்ப்பித்து விடவேண்டியதாகையினால், பங்காளிகள் யாவர் மனமும் அன்று ஒரே குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

கலங்கிய உள்ளத்துடன் தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்த கோதையம்மாள் தோட்டத்தின் மத்தியில் வந்து நின்றுகொண்டு திரும்பிப் பார்த்தாள். இருளும் பகலும் கலந்த அந்தி வேளையில், வெள்ளைவெளேரென்று வானத்தை நோக்கிக் கம்பீரமாக எழும்பி நின்றுகொண்டி ருந்த 'சுந்தர பவனம்' அவள் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது.

கந்தசாமிப் பிள்ளையின் மூத்த சகோதரன் செல்வ பதிப் பிள்ளைக்கு மாலையிட்டதனால் வாழ்க்கையில் கோதையம்மாள் வறுமையையும் துக்கத்தையுந்தான் கண்டி ருந்தாள். போதாததற்கு அகல்யா என்ற ஒரே பெண்ணை யும் ஏழைமையையும் மனைவிக்குத் துணையாக வைத்து விட்டுத் தமது முப்பதாவது வயதிலேயே செல்வபதி கால மாகி விட்டார். கண்ணின் கருமணி போன்ற தன் செல்வக் குமாரி அகல்யாவுக்குக் கல்யாணம் செய்வித்து ஆனந்தமாக அவள் வாழ்வதைக் காண வேண்டும் என்ற ஆசைதான் அவளது தாயுள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அகல்



பெண்ணை யாருக்கு மணம் முடித்துக் கொடுப்பது என்பதையும் கோதையம்மாள் நிச்சயித்திருந்தாள். தனக்கு இருக்கும் ஒரே பெண்ணை அந்நியத்தில் கொடுப்பதைவிடத் தன் அண்ணன் மகன் கணபதிக்குக் கொடுத்துப் பெண்ணையும் மருமகனையும் தன்னுடனேயே வசிக்கும்படி ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்பது அவளது ஆசை. மேலும் அகல்யாவுக்குக் கணபதியைவிட உயர்ந்த வரன் எங்கே கிடைக்கப் போகிறான்? இருபத்தெட்டு வயது நிரம்பாத கணபதி பி. ஏ. பட்டம் பெற்றிருந்தான். பார்ப்பதற்கு லட்சணமான பையன்; பெண்ணைக் கொடுத்தால், மனம் கோணாமல் நடந்துகொள்ளும் சுபாவமுள்ள நல்ல பிள்ளை.

'சுந்தர பவன'த்தை மறுபடியும் உற்றுப் பார்த்த கோதையம்மாள் பெருமூச்சு விட்டாள். இந்த ஜன்மத்தில் இத்தனை அழகானதொரு பங்களாவை அவள் தன் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்க முடியப் போவதில்லை. ரொக்கம், நகைகள் இவைகளைவிட, 'சுந்தரபவன'த்தையே அகல்யா தன் பங்கிற்காக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது? கணபதி கல்யாணத்திற்குப் பின் ஏதாவது கம்பெனி ஒன்றில் வேலை தேடிக்கொண்டு விட்டால் நிம்மதியாக எல்லோரும் அங்கேயே வசிக்கலாம்.

யோசனை செய்துகொண்டு நின்ற கோதையம்மாள் தன் பின்னால் காலடி ஓசை கேட்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''என்ன அத்தை, ரொம்ப மிரண்டு விட்டீர்களா?'' என்று புன்னகையுடன் கேட்டுக்கொண்டே கோதையம்மாள் தன்னுடன் உதவிக்காக ஊரிலிருந்து அழைத்து வந்த மருமகன் கணபதி வந்து நின்றான்.

''பயப்படவில்லை! ஒரே குழப்பமா யிருக்கு, தம்பி! அகல்யாவுக்கு நாளைப் பகலுக்குள்ளே ஜாபிதாவைக்

கொடுக்க வேண்டுமில்லையா? அதைப்பத்தி ரொம்பக் கவலையா யிருக்கு'' என்றாள்.

''அத்தை! என் யோசனையைக் கேட்டாக்க, அகல்யா இந்த பங்களாவைத் தன் பங்குக்கு எடுத்துக்கொள்கிறது தான் நல்லது என்கிறேன். சிறிது முன்பு நானும் அவளும் இதைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். அகல்யா அசட்டுத்தனமாக என்னவெல்லாமோ ஜாபிதா போட்டிருக் கிறாள். நான் அதையெல்லாம் அடித்துவிட்டு, 'சுந்தர பவன'த்தை ஜாபிதாவில் சேர்த்திருக்கிறேன்'' என்றான் கொஞ்சம் மனக் குறையுடன்.

''அது கிடக்கு, அறியாப் பெண். விளையாட்டுத் தனமா என்னமோ உளறது போலிருக்கு. நான் சொன்னால் கேட்கும். அது இருக்கட்டும், தம்பி! நான் நினைச்சதைப் போலவே நீயும் நினைச்சிருக்கிறாயே. அதுதான் எனக்கு ஆச்சரியமா யிருக்கு. சீக்கிரமா உங்க கல்யாணத்தை முடிச்சு வச்சு, இந்த பங்களாவிலே ரெண்டு பேரும் ஆனந்தமாகக் குடித்தனம் செய்வதைப் பார்த்தா எனக்கு வேறு ஒண்ணும் வேணாம்'' என்றாள் கோதையம்மாள் மூச்சு விடாமல்.

ஆனால் அதே சமயம் கணபதியின் மனம் வேறு விதமாகக் கணக்கிட்டுக்கொண்டிருந்தது. அகல்யாவின் பங்கிற்கு பங்களா கிடைத்தது என்றால் அத்தனை பெரிய பங்களா அவர்களுக்கு எதற்கு? வீண் செலவு! யாராவது பெரிய உத்தியோகஸ்தருக்கு வாடகைக்கு விட்டால் குறைந்தது மாதம் இருநூறு ரூபாயாவது வாடகை கிடைக் கும். வேறு ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, பங்களாவில் கிடைக்கும் வாடகையை வைத்துக் கொண்டு அவனும் அகல்யாவும் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தலாம். உத்தியோகம் இல்லை என்ற கவலைகூடக் கிடையாது. இல்லாவிட்டாலும் பங்களாவை ஒரேயடியாக விற்றாலும் லக்ஷத்திற்கு மேல் தேறும். அந்தப் பணத்தை



வைத்துக்கொண்டு சொந்தத்தில் ஏதாவது தொழில் நடத்தலாம் என்பதுதான் அவன் யோசனை.

''சரி வா, தம்பி! அகல்யா எங்கே! போய் முதல்லே பங்களாவைப் பத்தி அவளிடம் பேசுவோம்'' என்று கோதையம்மாள் உள்ளே திரும்பிச் சென்றாள்.

அதே சமயம் கந்தசாமிப் பிள்ளையின் இளைய சகோ தரன், மகன் குமரேசன், தன் மனைவியுடன் ஜாபிதாவைப் பற்றித்தான் தர்க்கித்துக் கொண்டிருந்தான்.

''இதோ பாருங்க. நான் சொல்லறதை நல்லாக் கேட் டுக்கொண்டு எழுதுங்க. உங்கப் பெரியப்பாரு பீரோவைத் திறந்து பார்த்தப்போ அப்படியே அசந்து போயிட்டேன். வெள்ளிக் குடம், குத்துவெளக்கு, தட்டுமுட்டுச் சாமான் கள் எல்லாவற்றிற்கும் கிரயம் போட்டுக் கூலிதள்ளி நம்ப எடுத்துக்கொள்வோம். இதை விட்டுட்டு பங்களா பங்க ளான்னு அடிச்சுக்கிறீர்களே, இந்த பங்களா நமக்குச் சோறு போடுமா? இல்லே, நம்ம பெண்கள் கல்யாணத் துக்குத்தான் உதவுமா?'' என்று அடித்துப் பேசினாள் [illegible]யம்மாள். மனைவியை எதிர்த்து வாதாடித் தோற் றுப் போன குமரேசன், தனது ஜாபிதாவின் தலைப்பில் 'பெட்டியிலுள்ள வெள்ளி, பித்தளைப் பாத்திரங்கள்' என எழுதிக்கொண்டான்.

கந்தசாமிப் பிள்ளையின் கடைசி சகோதரன் குமாரன் [illegible]தனிடம் தன் மனைவி எழுதிக்கொண்டிருந்த ஜாபி தாவை எட்டிப் பார்த்தான். ''பாக்கியம்! என்ன இது, உனக்குப் பித்துப் பிடிச்சுருக்குதா? நான்தான் நேற்று முழுவதும் உனக்கு எடுத்துச் சொல்லி நமக்கு என்ன தேவை என்பதை விளக்கியிருந்தும், இப்படி எழுதுகிறாயே!'' என்று சிறிது கோபத்துடன் அதட்டினான்.

''நான் கேட்ட இந்த ஒன்றை மட்டும் ஜாபிதாவில் சேர்த்துவிடுகிறேன். மற்றதெல்லாம் உங்க இஷ்டப்படி

எழுதிக்கொள்ளுங்கள்'' என்று பாக்கியம் ஒய்யாரமாக முகத்தைக் குலுக்கினாள்.

''வைர அட்டிகை ஒண்ணுக்கே பல ஆயிரம் ரூபாய் களை நம்ம பங்கிலிருந்து தள்ளிவிடுவார்கள். பங்களாவை எப்படி நான் இனி ஜாபிதாவில் சேர்க்க முடியும்? அவ்வளவு தான். பங்களா ஆசையை விட்டுவிட வேண்டியதுதான்!'' என்று பெருமூச்செறிந்தான் கோதண்டம். காலஞ்சென்ற கிழவியின் கழுத்திலே மின்னிக்கொண்டிருந்த வைர அட்டிகை தனது இளங்கழுத்தை அலங்கரிக்கையில் எப்படி ஜொலிக்கும் என்று கற்பனை செய்து கொண்டே மிக்க உவகையுடன் ஜாபிதாவின் தலைப்பில் வைர அட்டிகை என்று பெரிய எழுத்துக்களில் எழுதினாள் பாக்கியம்.

பங்களாவைக் குறித்துத் தன்னுடன் வீணாகக் கணபதி விவாதித்ததைக் குறித்து அகல்யாவுக்கு மிகவும் கோபம் ஏற்பட்டிருந்தது. தனக்கு வேண்டியது யாது என்று தெரிந்து பொறுக்கிக்கொள்ளத் தெரியாத பெண் அல்ல அவள். கலாசாலைப் படிப்புப் பெற்ற இருபத்திரண்டு வயது மங்கை அவள். சித்தப்பா விட்டுப் போகும் சொத்தை அடையப் போகிறவள் அவள். அதைப்பற்றி யோசனை சொல்லக் கணபதி வந்தது அவளுக்கு ஏனோ பிடிக்க வில்லை! தன்னை அவள் மணந்து கொள்ளப் போகிறான் என்ற ஒருவித உண்மையைக் கணபதி அடிக்கடி வெளியே காட்டிக்கொண்டு சில நாட்களாகத் தன்னை அதிகாரம் செய்வதை அகல்யா கவனித்துக் கொண்டு வந்தாள். அவனது மனப்போக்கு அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. ஜாபிதா தயாரிக்க அன்று சாயங்காலம் அவள் உட்கார்ந்தபொழுது கணபதி கூப்பிடாததற்கு முன் தானாக அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டு யோசனைகள் சொல்ல ஆரம்பித்தான். எத்தனையோ மட்டுப்படுத்தியும் அகல்யாவுக்குக் கோபம் தாங்க முடிய வில்லை. ''உங்கள் யோசனை அப்படியே இருக்கட்டும்,



எனக்குத் தலையை வலிக்கிறது'' என்று எழுந்து விர்ரென மாடிப்பக்கம் விரைந்து சென்றாள்.

காற்றோட்டமாயிருந்த அந்த விஸ்தாரமான அறைக் குள் அவள் நுழைந்ததும் அங்கே தான் தனியாக இல்லை என்பதை அறிந்துகொண்டாள். கந்தசாமிப் பிள்ளையின் வாரிசுதாரர்களில் கடைசியாக உள்ள சுந்தரமூர்த்தி அறை யின் சுவரில் மாட்டியிருந்த சில படங்களை ஆர்வமாகப் பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டாள்.

சுந்தரமூர்த்தி கந்தசாமிப் பிள்ளையின் சகோதரி மீனாக்ஷியின் ஒரே மகன். பம்பாயில் வெளிவரும் ஆங்கில தினசரிப் பத்திரிகை ஒன்றின் உதவி ஆசிரியராக அவன் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். பல வருஷங்களுக்குப் பின்புதான் முதல் முதலாக அவனை அகல்யா சித்தப்பாவின் 'சுந்தர பவன'த்தில் சந்தித்தாள். ஒருவரைப் பற்றி ஒருவர் விசாரித்துத் தெரிந்துகொள்ளக்கூடப் பொழுதில்லாமல் எல்லோரும் அவரவர் காரியத்தில் ஈடுபட்டிருந்ததனால், அகல்யாவிடம் அதிகம் பேசிப் பழக அத்தானுக்குப் பொழு தில்லை.

சுந்தரமூர்த்தி அந்தச் சித்திரப் படங்களைப் பார்த்து தன்னைமறந்தவன்போல் நின்றுகொண்டிருந்தான். ''சித்தப் பாவுக்குக் கலையபிமானம் அதிகமாக இருந்திருக்க வேண் டும் என்று நான் ஊகிக்கிறேன்'' என்றாள் அகல்யா.

சட்டென்று திரும்பிப் பார்த்த சுந்தரமூர்த்தி, ''புகை யிலை வியாபாரம் பண்ணிக்கொண்டிருந்த மாமாவின் கலை உணர்ச்சி ஒரேயடியாகப் புகைந்து போய்விடவில்லை என்பதற்கு இந்த வீட்டில் அங்கங்கே சான்றுகள் இருக் கின்றன. எனக்கு இந்த வீட்டிலுள்ள பொருள்கள் ஒன்றின் மீதும் ஆசை ஏற்படவில்லை. ரவிவர்மா வரைந்த இந்தச் சித்திரப் படங்கள் சிலவற்றையும், மாமாவின் புஸ்தக அலமாரியையும், புஸ்தகங்களையும் மட்டும், ஜாபிதாவில்

எழுதிக்கொண்டிருக்கிறேன். மற்றவைகளை வக்கீல் தமது உசிதப்படி விநியோகம் செய்துகொள்ளட்டும்'' என்று புன்னகை செய்தான்.

''அடாடா! நான் தயாரிக்க விரும்புவது போலவே நீங்களும் ஜாபிதாவைத் தயாரித்து விட்டீர்களா!'' என்று ஆச்சரியத்துடன் கூறினாள் அகல்யா.

''அப்படியா! என்னைப் போலவே மாமாவின் கலைப் பொக்கிஷம் உங்களையும் கவர்ந்திருக்கிறது போலிருக்கிறது. ஆனாலும் பரவாயில்லை. படங்கள் இரண்டு இருக்கின்றன; ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொள்வோம். புஸ்தகங்களில் இரண்டு காபிகள் இருக்கின்றன. பங்கிட்டுக் கொள்வோம்'' என்று வரிசைப் பற்கள் தெரிய மெல்லச் சிரித்தான் சுந்தரமூர்த்தி.

''இருட்டி விட்டதே!'' என மின்சார விளக்கைப் போட்டாள் அகல்யா. வெளிச்சத்திலிருந்தபடி பங்களாவின் இருண்ட பாகத்தைத் திரும்பிப் பார்த்த அவள் உடல் விவரிக்க முடியாத ஒருவித பயத்தில் ஒரு கணம் சிலிர்த்தது.

''இத்தனை பெரிய இந்த பங்களா எனக்கு வியப்பும் ஆனந்தமும் தருவதற்குப் பதில் ஏனோ ஒருவித அச்சத்தையே கொடுக்கிறது. விஸ்தாரமான இந்த பங்களா அறைகள் ஒவ்வொன்றிலும் துயரம் குடிகொண்டிருப்பது போல் எனக்குப் பிரமை ஏற்படுகிறது'' என்றாள் மெல்லிய குரலில் அகல்யா.

''உங்கள் மனசிலே கற்பனை அலைகள் அதிகம் கொந்தளித்துக் கொண்டிருப்பதனால்தான் இந்த விதமான மனப்பிராந்தி. பங்களாச் சுவர்கள் ஒவ்வொன்றும் ஒரு சோகக் கதையைச் சொல்வதாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் நீங்கள் படிக்கும் துப்பறியும் நாவல்களே யாகும். இன்று இந்தப் புஸ்தகத்தைப் படியுங்கள். உங்கள் மனப்பிரமை அகலும்'' என்று



பரிகாசமாகக் கூறி, மூலையிலிருந்த புஸ்தக அலமாரியின் [illegible] தட்டிலிருந்து ஒரு பழைய புஸ்தகத்தை எடுத்து [illegible] அவளிடம் கொடுத்தான்.

அத்தானின் பரிகாசப் பேச்சுக்களைக் கேட்ட அகல்யாவின் கன்னங்கள் சிவந்தன. அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க ஏனோ சட்டென்று அவளுக்கு வெட்கம் ஏற்பட்டது. புஸ்தகத்தை வாங்கிக்கொண்டு மின்னலைப் போல் மாடியின் கோடியிலிருந்த அறைக்குள் ஓடி விட்டாள்.

அன்று இரவு போஜனத்திற்குப் பின் புஸ்தகத்தைத் திறந்தாள் அகல்யா. தொப்பென ஒரு பழுப்பேறிப் போன காகிதம் அதிலிருந்து விழுந்தது. அதை எடுத்துப் பிரித்தாள்.

''அன்புள்ள ஜீவா,

என் அருமை சிநேகிதியான உன்னிடம் என் மனத் துயரத்தை எடுத்துச் சொல்லி கொள்ளாமல் பின் யாரிடம் சொல்லி ஆறுதல் பெறமுடியும்? 'அவளுக்கென்னகுறைச்சல்! பணம், பங்களா, நகை நட்டுகள்' என்று பார்ப்பவர்கள் என்னைப் பற்றிப் பிரமாதமாகத்தான் எண்ணுவார்கள். ஆனால் நான்படும் கஷ்டத்தையும்வேதனையையும் யாரால் நினைத்துப் பார்க்க முடியும்? மாமாவின் மகன், பார்க்க லக்ஷணமாயிருக்கிறார் என்று அசைப்பட்டுக் கொண்டுதான் நான் இவரை மணந்துகொண்டேன். சின்ன வயதிலேயே இவருடைய பிடிவாத குணமும் முரட்டுத்தனமும் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். காலப் போக்கில் சரியாகிவிடும் என்றுதான் சொன்னேன். ஆனால் இவருடைய முரட்டுச் சுபாவமும் துஷ்டக் குணமும் கடைசி நாள்வரை திருந்தப் போவதில்லை என்பதை நினைக்கையிலே என் மனம் துக்கத்தினால் வெடித்துப் போகிறது. நான் படும் கஷ்டங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நேரில் சொல்லலாம் என்றாலோ சந்தர்ப்பம் எங்கே கிடைக்கப் போகிறது? என்னுடைய துயரம் என்னோடு மடிந்து

போகப் போகிறது. ஒன்று மட்டும் சொல்வேன். எதற்கும் அபிப்பிராய பேதமும், கொஞ்சமும் ஒற்றுமையும் இல்லாத புருஷனை மணப்பதைவிட, பாழுங் கிணற்றில் விழுந்து விடலாம். அவன் ஆசை அத்தானாக இருக்கட்டும், அம்மாஞ்சியாகத்தான் இருக்கட்டும்; சந்தோஷமாக வாழ விரும்பும் பெண்ணிற்கு ஏற்ற மணாளன் அல்லவே அல்ல! மற்றவை பிறகு...

அன்புள்ள
கோமதி.

கடிதத்தைப் படித்த அகல்யா நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். அவளது இருதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது. காலஞ்சென்ற சித்தியின் மனத்துயரைக் கற்பனை செய்ய முடியாது அவளது உள்ளம் வேதனையும் பச்சாத்தாபமும் அடைந்தது.

மறுநாள் பகல் ஒவ்வொருவரும் அவரவர் தயாரித்த ஜாபிதாவை வக்கீல் வரதராஜுலு நாயுடுவிடம் சமர்ப் பித்துவிட்டனர். அன்று சாயங்காலம் தோட்டத்துச் சிமெண்ட் மேடைமீது உட்கார்ந்திருந்த அகல்யா தன் பிற்கால வாழ்க்கையைப்பற்றி யோசித்த வண்ணம் கண் களை மூடிக்கொண்டிருந்தாள்.

''ஆமாம்! நீ கொடுத்த ஜாபிதா ரொம்ப நன்றாயிருக் கிறது? புஸ்தகமும் படங்களும் யாருக்கு வேணும்? அடுப்பில் போட்டால்கூட அரைப்பானை வெந்நீர் ஆகாது'' என்றான் கணபதி அதட்டிய குரலில்.

திடுக்கிட்டு விழித்துக்கொண்ட அகல்யா எழுந்து நின்றாள். ''எனக்கு அவைகள்தான் வேண்டும்!'' என்றாள் திடமான குரலில்.

''சித்தப்பாவின் உயிலில் என்ன எழுதியிருக்கிறார்? அவருடைய சொத்தை எல்லாரும் ஒழுங்காகப் பங்கிட்டுக் கொண்டு அவரது நினைவை என்றும் உணர்ந்து ஆனந்த மாக இருக்கும்படி எழுதியிருக்கிறார். சித்தப்பாவும்



சித்தியும் இன்ப துன்பத்தைப் பகிர்ந்து வாழ்ந்த அழகிய பங்களாவை விட்டுவிட உனக்கு மனம் எப்படி வந்தது!'' என்று உரத்த குரலில் கேட்டான் அவன்.

''ஸ்... மெல்லப் பேசுங்கள். சொத்தைப் பற்றிய விஷயம் என்னுடையது!'' என்றாள் அகல்யா.

''எனக்குத் தெரியும். நேற்று அந்தத் தடியன் சுந்தர மூர்த்தியுடன் மாடியறையில் நீ பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தவுடனேயே நினைத்தேன். இதெல்லாம் அவனு டைய யோசனையோ!'' என்று பொறாமை கொந்தளிக்கக் கேட்டான் கணபதி.

''இருக்கலாம்'' என்றாள் அசட்டையாக அவள்.

''பேஷ்! நாளைக்குக் கணவனாகப் போகிற நான் சொல்வது உன் மூளைக்கு எட்டவில்லை. எவனோ ஒருவன் கூறும் யோசனை உயர்ந்ததாகத் தோன்றியதோ! பேஷ்!'' என்று ஆத்திரமாகக் கத்தினான் கணபதி.

''உங்களை மணந்து கொள்ளப் போகிறேன் என்று யார் சொன்னது? அம்மா நிச்சயித்திருந்தால் மாட்டேன் என்று சொல்ல எனக்கு உரிமை இல்லையா? உங்களுக்கும் எனக்கும் கொஞ்சங்கூட அபிப்பிராய ஒற்றுமையே கிடை யாது. எதற்கும் தர்க்கம்! இந்த லக்ஷணத்தில் நாம் இரு வரும் மணந்துகொண்டு ஆனந்தமாக எப்படி வாழ முடியும்? என் சித்தப்பாவின் சொத்து எப்படிப் பங்கிடப் பட்டாலும் எனக்கு அக்கறையில்லை. இந்தச்சொத்தைவிட மதிப்பிடுதற்கரிய சொத்தை எனக்குச் சித்தப்பா கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். அது என்ன தெரியுமா? 'மன ஒற்றுமை சிறிதுமே இல்லாத ஒரு புருஷனை ஒரு பெண் மணந்து கொள்வதைவிடப் பாழுங்கிணற்றில் விழலாம். அவள் அத்தானாயிருந்தால் என்ன, அம்மாஞ்சியாயிருந் தால் என்ன!' என்ற புத்திமதி'' என்று கூறிய அகல்யா

கணபதியின் பதிலுக்குக் காத்திராமல் 'விர்' என்று
பக்கம் நடந்து சென்றாள்.

எதிரே வந்து கொண்டிருந்த அத்தான் சுந்தரமூர்
யைக் கண்டதும் புன்னகையுடன் நின்றாள்.

# தேவகியின் கணவன்

லலிதா சிட்டுக் குருவியைப்போல் மாடியறைக்கு
கீழ்க்கூடத்திற்குமாக அடிக்கொரு தடவை ஓடிக்கொ
டிருந்தாள். ''இதை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டே
அக்கா!'' என்று உற்சாகத்துடன் அவள் கூவிக்கொ
மறதியில் விட்டுப்போன சாமான்களை நினைத்
கொண்ட போதெல்லாம் தேடித்தேடி எடுத்து வைத்
கொண்டிருந்தாள். பம்பாயிலிருந்து தன் கணவ
தன்னைப் புக்ககம் அழைத்துப் போகத் தானே நே
வந்திருக்கிறான் என்ற குதூகலத்தில் அவளுக்கு
பூலோகமா, ஸ்வர்க்கமா என்று மிகவும் குழப்பமா
இருந்தது இயற்கைதானே!

தங்கையின் மன மகிழ்ச்சியையும், மிதமிஞ்சிய உற்சா
கத்தையும் ஜாடையாகக் கவனித்துக் கொண்டிருந்
தேவகி, சமையலறையில் புது மாப்பிள்ளைக்குத் தயா
செய்துகொண்டிருந்த விருந்தில் உதவி செய்துகொண்
ருந்தாள். கூடத்துக் கடிகாரம் மணி பதினொன்று அ
தைத் கேட்டதும் கையில் வைத்திருந்த பாத்திரத்தை
கீழே வைத்துவிட்டு வாயிற்புறம் ஓடி வந்து பார்த்தா
வழக்கம்போல் அன்றும் காலை பதினொரு மணிக்கு
தபால்காரன் தெருக்கோடியில் வந்துகொண்டிருந்தா
ஒவ்வொரு வீடாக அவன் நுழைந்து வெளியே வருவதற்கு
தேவகிக்கு ஒரு யுகம்போலத் தோன்றியது. தங்கம் வீட்டி
பக்கம் தபால்காரன் வருவதைக் கண்ட அவள் இருத
படபடவென்று துடித்துக்கொண்டது. முகம் கும்மென்
ஒரு தடவை வேர்த்தது. தபால்காரனோ அவ